# சமூகப் புனரமைப்பில் மதஸ்தலங்களின் பங்களிப்பு: அளிகம்பை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு

## Role of Religious Places in Social Renovation: A Study Focusing on the Aligambai Area

I.F. Ilma[1], A.S. Shafira banu[2], S.M.M. Mazahir[3], M.N.S. Sumeira[4], A.A.S. Hairiya[5] & M.S.F. Afra[6]

[1,5]Department of Arabic Language, South Eastern University of Sri Lanka
[2,3,4,6]Department of Islamic Studies, South Eastern University of Sri Lanka
ilmaisamdeen@gmail.com

**ஆய்வுச்சுருக்கம்**

உலகின் பல்வேறு பகுதிகளிலும் குறிப்பாக வளர்ந்து வரும் நாடுகளில் பழங்குடியினர் பாரிய சமூக, பொருளாதார மற்றும் கலாச்சாரப் பிரச்சினைகளுடன் வாழ்ந்து வருகின்றனர். அந்தவகையில் அபிவிருத்தி அடைந்து வரும் நாடான இலங்கையிலும் பல்வேறு பகுதிகளில் பழங்குடியினர் வாழ்ந்து வருகின்றனர். கிட்டத்தட்ட 14ஆம் 15ஆம் நூற்றாண்டுகளில் (Riswan, Rameez, Lumna, 2017) இலங்கையை வந்தடைந்த பழங்குடிகள் அவர்களது குடியேற்றங்களை கடலோரத்தில் அமைத்துக் கொண்டனர். இவ்வாய்வு இலங்கையில் அம்பாறை மாவட்டத்தின் தென்கிழக்குப் பிராந்தியத்தில் உள்ள அளிகம்பைக் கிராமத்தில் வசிக்கும் வனக்குறவர்களை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளது. இவர்கள் மீது அரசாங்கமோ அரச சார்பற்ற நிறுவனங்களோ எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை. இவ்வாறு கவனிப்பாரற்று இருந்த இச்சமூகத்தை அருட்திரு கொட்பீற்குக் அடிகளார் அவர்களது வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக அளிகம்பை எனும் இடத்தில் 1961ஆம் ஆண்டு புனித சாவேரியார் தேவாலயம் ஒன்றை நிறுவினார். அந்தவகையில் இவ்வாய்வு அளிகம்பைப் பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற கிறிஸ்தவ ஆலயமானது சமூகத்தின் சகல துறைகளையும் மையப்படுத்தி புனரமைப்புப் பணிகளை எந்தவகையில் முன்னெடுக்கின்றது என்பதினை நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வுக்கான தகவல்கள் முதலாம் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகளின் மூலம் சேகரிக்கப்பட்டுள்ளன. ஆய்வு முடிவாக சமூகப் புனரமைப்பில் இவ்வாலயம் சமூக, பொருளாதார, கலாச்சார மற்றும் கல்வி ரீதியான பிரச்சினைகளுக்கு பல வகைகளிலும் பங்களிப்புக்களை மேற்கொண்டு வருகின்றமை கண்டறியப்பட்டுள்ளது. அத்தோடு ஏனைய சமூக மக்களுக்கு கிடைக்கும் ஆதரவுகள், சலுகைகள் மற்றும் உதவிகள் என்பன இச்சமூகத்திற்கும் பாரபட்சமின்றி கிடைக்குமானால் அவர்களது வாழ்வு இன்னும் பல முன்னேற்றங்களை அடையும் என்பது இவ்வாய்வின் முடிவாகக் கொள்ளப்படுகின்றது.

**திறவுச் சொற்கள்**: அளிகம்பை, தேவாலயம், பழங்குடியினர், வனக்குறவர்.

**அறிமுகம்**

ஒவ்வொரு சமயத்தினதும் கலாச்சாரப் பாரம்பரியத்தை எடுத்துக்காட்டும் நிறுவனமாக மதஸ்தலங்கள் காணப்படுகின்றன. அத்தலங்கள் தங்களினுடைய சமயத் தனித்துவத்தினை வெளிப்படுத்துவதாக அமைகின்றன. அந்நிறுவனங்களானது ஒவ்வொரு சமயத்தினுடைய உயிரோட்டமாகவும், ஆணிவேராகவும் காணப்படுகின்றன. மேலும் இத்தலங்கள் மதவழிபாடுகளையும் தாண்டி சமூகத்தினை உயர் ஒழுக்கத்தின் பால் அழைத்து அச்சமூகத்தின் புனரமைப்புப் பணியில் ஈடுபடுவதினை அறியக்கூடியதாக உள்ளது.

அதற்கமைவாக பௌத்த சமயத்தவர்களின் தனித்துவத்தினை எடுத்துக்காட்டும் நிறுவனமாக விகாரைகளைக் குறிப்பிட முடியும். இத்தளமானது வணக்க வழிபாடுகளை மேற்கொள்ளுவதற்காக மாத்திரமன்றி கலாச்சாரப் பாரம்பரியத்தினைப் பாதுகாத்தல் (புத்தரின் பல், வெள்ளரசு மரம், புத்தரின் வருகையோடு இணைந்த புனித பூமி), பண்பாட்டு அம்சங்கள், சமூக ஒற்றுமை, பௌத்த பிரிவெனாக்கள் (துறவிமார்களுக்குப் பயிற்சியளித்தல் - பிக்கு, பிக்குனி), சமய விழாக்களை முன்னெடுத்துச் செல்லல் (பொசன், பெரஹரா), பொருளாதார நடவடிக்கைகள், தர்மக் கொள்கைகள், ஆலோசனைகளை மேற்கொள்ளல், கலாச்சார மேம்பாடு, சமூக சீர்திருத்த நடவடிக்கைகள், அறிவுப்பணி என்பனவற்றை மேற்கொள்கின்றன.

இந்துக்களினுடைய சமயத் தனித்துவத்தினை சுட்டிக்காட்டக் கூடிய தலமாக கோவில்கள் காணப்படுகின்றன. இவை வணக்க வழிபாடு, பிரார்த்தனை போன்றவற்றை

மேற்கொள்வதற்காக மாத்திரமன்றி சமூக முன்னேற்றப் பணிகளிலும் ஈடுபடுகின்றன. அவற்றுள் இந்துக் குருமார்களுக்கு பயிற்சியளித்தல், இந்து சமய சொற்பொழிவு, அறிவுப்பணி (இந்துக்களின் கல்வியினை மேம்படுத்துதல்), சமய விழாக்கள், பொருளாதார நடவடிக்கைகள் (காணிக்கை), திருமண வைபவங்கள், கலந்தாலோசனைகள், குற்றப்பரிகார வழிபாடுகள், சமூக சீர்கேடுகளைத் தடுத்தல், ஏழைகளுக்கான அன்னதான நடவடிக்கைகள் போன்றவற்றைக் குறிப்பிட முடியும். (திருமுகன், 2011)

முஸ்லிம் சமூகத்தினை அடையாளப்படுத்தும் மதஸ்தலமாக மஸ்ஜித்கள் காணப்படுகின்றன. இது ''சமூகத்தின் இதயமாகவும் உயிரோட்டமாகவும், அச்சாணியாகவும் திகழும் மஸ்ஜிதுகள் நீண்ட கால வரலாற்றுப் பாரம்பரியத்தினை கொண்டிருப்பதோடு முஸ்லிம் சமூகத்தில் அளவுக்கதிக செல்வாக்கினைக் கொண்டிருக்கின்றன.'' (அமீன், 1990)

இச்சமூகத்தின் அனைத்து நடைமுறைகளும் மஸ்ஜித்துக்களை மேம்படுத்தி அமையப் பெறுவதன் மூலம் ஆரோக்கியமான சமூகத்தினைக் கட்டியெழுப்ப முடியும். அவ்வகையில் வணக்க வழிபாடுகளை நிறைவேற்றல் என்ற நிலையைத் தாண்டி சமூகத்தினை புனரமைக்கும் பணிகளான அறிவுப்பணி, அரசியல், சமூக சீர்திருத்தம் (இஜ்திமா, பயான், த.்.வா), தனிமனிதனை உருவாக்கல், ஆன்மீக விருத்தி, பண்பாட்டுச் சீர்திருத்தம், பொருளாதார நடைமுறை, சமூக முன்னேற்றத்துக்கான கலந்தாலோசனை, நீதி செலுத்துதல், சர்வதேச உறவுகளை மேற்கொள்ளல், நூல் நிலையங்கள், கல்விச் சீர்திருத்தங்கள் என்பனவற்றை குறிப்பிட முடியும். (Nairoos, Begam, Safnas, 2017)

கிறிஸ்தவ சமயத்தினுடைய கலாச்சார மரபுப் பாரம்பரம்பரியத்தினை உணர்த்தக் கூடிய ஸ்தலமாக கிறிஸ்தவ தேவாலயங்களை குறிப்பிட முடியும். இவை வணக்க வழிபாடுகளையும் அதனோடு இணைந்து சமூக சீர்திருத்தப் பணிகளையும் மேற்கொள்ளக் கூடியதாக காணப்படுகின்றன. அவையாவன: மறைக்கல்வி பாடப் போதனை, பாதிரிமார்களைப் பயிற்றுவித்தல், திருமண வைபவங்கள் நடாத்தல், திருவிழாக்களை முன்னெடுத்துச் செல்லல், சமூக முன்னேற்றம், அபிவிருத்திச் செயற்பாடுகளை மேற்கொள்ளல், ஆன்மீக - ஆளுமை விருத்திக்கான நிகழ்ச்சிகளை நடாத்துதல், பொருளாதார உதவிகளை சமூகங்களுக்கிடையே மேற்கொள்ளுதல் போன்ற பல பணிகளை மேற்கொள்ளக் கூடியனவாக அமைகின்றன.

இவ்வாறாக தத்தம் சமூதாயத்தினை விருத்தியடையச் செய்வதற்காகவே இத்தளங்கள் செயற்பட்டு வருகின்றன. இவை இவ்வாறு காணப்படுகின்ற போதிலும் எல்லா சமூகத்தினை விடவும் சற்று வித்தியாசமான கலாச்சாரப் பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் கொண்ட சமூகமாகவே பழங்குடியினர் காணப்படுகின்றனர். இவர்களில் வனக்குறவர்கள் ஒரு பிரிவினராவர். நாடோடி மக்களாகிய வனக்குறவர்கள் நாட்டின் வடமத்திய மாகாணத்தில் அநுராதபுரம், கலாவெவ, தம்புத்தேகம, பொலன்னறுவை, விஜிதபுர, மன்னம்பிட்டி போன்ற பிரதேசங்களிலுள்ள காடுகளிலும் அதனைச் சார்ந்த பிரதேசங்களிலும் அதிகளவு வாழ்ந்து வந்த போதிலும் நாடு முழுவதும் நாடோடிகளாகத் திரிந்து வாழ்வாதாரத்தை தேடிவந்துள்ளனர் என்பதினை அவர்கள் சம்பந்தமான தகவல்களை அறிந்தவர்கள் மூலமாக பெற்றுக் கொள்ள முடியுமாக இருந்தது.

இக்குறவர் கூட்டம் வடக்கே பருத்தித்துறையில் இருந்து தெற்கே தேவேந்திரமுனை வரையும் கிழக்கே சங்குமான்கந்தையிலிருந்து மேற்கே கொழும்பு வரையும் பாதை யாத்திரை மூலம் வாழ்வாதாரத்தைப் பெற்று வந்துள்ளனர். இவர்கள் நாடு முழுவதிலும் சுற்றித் திரிந்த போதிலும் வரண்ட பிரதேச மழைக்காட்டுப் பகுதியிலும் வாழ்ந்து வந்துள்ளனர். 1950ஆம் ஆண்டையடுத்து வரண்ட பிரதேசங்களில் குடியானவர்கள் தமது குடியேற்றத்திட்டங்களை ஏற்படுத்திய போதிலும் மக்களால் விரட்டியடிக்கப்பட்ட குறவர்களின் ஒரு பகுதியினர் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாறை, மட்டக்களப்பு காடுகளில் தமது வாழ்விடங்களை மாற்றி அமைத்துக் கொண்டனர். இவற்றுள் குறிப்பாக அம்பாறை மாவட்டத்தினைச் சார்ந்த காட்டுப் பிரதேசங்களில் தற்காலிகமாக குடியிருப்புக்களை ஏற்படுத்தி தங்கள் வாழ்வாதாரத்தினை அமைத்துக் கொண்டனர். இவர்கள் புளியடிப்பிட்டி, மெட்டையாண்டவெளி, முள்ளிக்குளம், பனையறும்பன்கேணி, ஹிங்குரானக் காடுகளில் காலத்திற்கு காலம் மாறி வாழ்ந்து வந்தனர். இதனைத் தொடர்ந்து பெரியவிகாரை, சின்னவிகாரை, சங்கமித்தக் குளம், கைக்கேணி, முதிர்ச்சோலை போன்ற இடங்களில் குடியமைத்து வாழ்ந்து வந்தனர். இக்காலப்பகுதியில் இவர்கள் மீது அரசாங்கமோ, அரச சார்பற்ற நிறுவனங்களோ எவ்வித அக்கறையும் கொண்டிருக்கவில்லை. இந்நிலையில் அருட்திரு. கொட்பிற்குக் அடிகளார் அவர்களது வாழ்வில் மாற்றத்தினை ஏற்படுத்த முனைந்தார். (வனக்குறவர்கள் அடிகளாரை கொக்குச் சாமியார் என அழைத்து வருகின்றனர்.) இவர் அக்கரைப்பற்று ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட

அளிகம்பை எனும் இடத்தில் 1961ஆம் ஆண்டு புனித சாவேரியார் தேவாலயம் ஒன்றினை நிறுவி கத்தோலிக்க மதத்தினை தழுவ விரும்பியவர்களுக்கு ஞானஸ்தானம் செய்து வந்தார். அத்தோடு நாடோடி வாழ்கையிலிருந்து விடுபடுவதற்கு இவர் உதவியாகவும் காணப்பட்டார். இச்சமூகத்தின் பாரம்பரிய வாழ்க்கையினைக் கட்டுப்படுத்தி அவர்களை ஓர் குறை நாகரீகமுள்ள மக்களாக மாற்றுவதற்கு உறுதுணையாகக் காணப்பட்ட நிறுவனமாக இத்தேவாலயத்தினைக் குறிப்பிடலாம். இந்நிறுவனமானது வணக்க வழிபாடுகளின்பால் ஒன்றுபடுத்துவதினை மாத்திரமல்லாது சமுதாயத்தினை புனரமைக்கும் பணிகளையும் செய்து வருகின்றது. அத்தோடு இம்மக்கள் அவர்களின் வாழ்கையின் யதார்த்தநிலை பற்றி உணராது நாகரீகமற்ற சமூதாயமாக காணப்பட்டனர். அவர்களை ஓரளவு நாகரீகமுள்ளவர்களாக மாற்றியது. (குகபாலன், 2000)

**ஆய்வுப் பிரச்சினை**

சமூகப் புனரமைப்பை மேற்கொள்வதில் பல்வேறு சமூக நிறுவனங்கள் செல்வாக்குச் செலுத்துகின்றன. அதில் மதஸ்தலங்கள் முக்கியமான பங்களிப்பைச் செய்கின்றன. குறிப்பிட்ட இந்த மதஸ்தலங்களில் இப்பிரதேச கிறிஸ்தவ ஆலயம் குறிப்பிடத்தக்க அளவு சமூகப் புனரமைப்பில் பங்களிப்புக்களைச் செய்து வருகின்றதா என அறிவதே ஆய்வுப் பிரச்சினையாகும்.

**ஆய்வு நோக்கம்**

அம்பாறை மாவட்ட அளிகம்பை பிரதேசத்தில் அமைந்திருக்கின்ற கிறிஸ்தவ ஆலயம் அப்பிரதேச சமூகத்தின் சகல துறைகளையும் மையப்படுத்தி மேற்கொள்ளும் புனரமைப்புப் பணிகளை மதிப்பீடு செய்தல்.

**ஆய்வு முறையியல்**

இவ்வாய்வானது பண்பு ரீதியான தரப்படுத்தல் முறையினை பெறுமளவில் தழுவி நிற்பதுடன் ஆய்வுக்கான தரவுகள் முதலாம் நிலைத் தரவுகள் களவிஜயத்தின் மூலம் பெறப்பட்டது. 45 நபர்கள் கொண்ட ஆய்வுக் குழு கள ஆய்வில் ஈடுபட்டு வினாக்கொத்து, கலந்துரையாடல் மற்றும் அவதானம் என்பனவற்றினூடாக தகவல் பெறப்பட்டது. இங்கு 58 குடும்பங்களிடம் வினாக்கொத்துக்கள் வழங்கப்பட்ட போதிலும் 50 குடும்பங்கள் மூலமே தகவல்கள் முழுமையாக பெற வாய்ப்பு கிடைக்கப்பெற்றது. ஏனைய 08 குடும்பத்தினுடைய குடும்பத் தலைவர்கள் மற்றும் பொறுப்புதாரிகள் வேலைவாய்ப்பு மற்றும் இதர பணிகளுக்காக வீட்டைவிட்டு வெளியேறிய நிலையில் காணப்பட்டதால் அங்கு சிறுபிள்ளைகளிடம் முழுமையான தகவல்களைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை. மேலும் சமய பாதிரிமார்கள் மற்றும் கிராமவாசிகளிடம் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவு மூலங்களாக பிரதேச செயலக ஆண்டறிக்கை, நூலக ஆவணங்கள், முன்னைய ஆய்வுக் கட்டுரைகள், புத்தகங்கள், இணையதள கட்டுரைகள் பயன்படுத்தப்பட்டு, பெறப்பட்ட தகவல்கள் அறிவியல் நெறிமுறைகளினூடாக அணுகப்பட்டுள்ளது. பெறப்பட்ட தகவல்கள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு விபரண ரீதியாக முடிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

**ஆய்வுப் பிரதேசம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அமைந்துள்ள அம்பாறை மாவட்டத்தில் ஆலையடிவேம்பு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட அளிகம்பை பிரதேசமானது கடல் மட்டத்திலிருந்து 7.5 - 120 அடி உயரம் கொண்டதாக காணப்படுகின்றது. ஆய்வுப் பிரதேசமானது மொத்தமாக 309 குடும்பங்களைக் கொண்டுள்ளது. இதில் 1113 நபர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 546 ஆண்கள் 567 பெண்களும் அடங்குகின்றனர். (ஆலையடிவேம்பு பிரதேச செயலக புள்ளிவிபரவியல் திரட்டு, 2013)

வனக்குறவர்களின் தாய்மொழி தெலுங்காகும். இம்மொழியோடு கன்னடம், மலையாளம், தமிழ், சிங்களம், ஆங்கிலச் சொற்களும் கலந்துள்ளன. ஆலையடிவேம்பு பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட பகுதிகளில் மொத்தமாக 12 பாடசாலைகள் காணப்படுகின்றன. அவற்றுள் அளிகம்பைப் பிரதேசத்தில் 01 பாடசாலை காணப்படுவதுடன் இப்பாடசாலை 10ஆம் தரம் வரையில் 09 வகுப்பறைகளையும் 287 மாணவர்களையும் கொண்டுள்ளது. இங்குள்ள குடும்பங்களில் 131 குடும்பங்கள் விவசாயத்திலும், 73 குடும்பங்கள் மீன்பிடித் தொழிலிலும், 68 குடும்பங்கள் கூலித்தொழிலிலும், 8 குடும்பங்கள் வியாபாரத்திலும், 2 குடும்பங்கள் அரசாங்கத் தொழிலிலும் ஈடுபடுவதுடன் 27 குடும்பங்கள் ஏனைய தொழில்களிலும் ஈடுபடுகின்றனர். (மூலம்: ஆலையடிவேம்பு பிரதேச செயலக மூல வளத்திரட்டு, 2013)

இவர்களினுடைய உடையலங்காரத்தினைப் பொறுத்தவரையில், ஆண்கள் இடுப்பிலிருந்து முழங்காலிற்கு மேல்வரை சரம் அணிபவர்களாகவும், தலைமுடிகளை நீளமாகவும், குடுமிகளை வைத்திருப்பவர்களாகவும் இவர்கள் காணப்படுகின்றனர். இவர்கள் தமது குடும்பங்களின் நல்ல நிகழ்ச்சிகளிலோ அல்லது பொதுவான வருட நிகழ்ச்சிகளிலோ மூத்த ஆண்கள் மற்றைய குடும்ப அங்கத்தவர்களைப் போல புத்தாடை அணிந்து ஆடிப்பாடி மகிழ்வர்.

இக்குறத்திப் பெண்கள் 50 ஆண்டுகளுக்கு முன்னர் மார்புச் சட்டை அணிவதில்லை. இவர்கள் பருத்திச்சேலையினால் மார்பை மூடிக் கொள்வர். தற்போது இவ்வழக்கம் ஒழிந்துவிட்டது. ஆனால் சில வயது முதிர்ந்தவர்களே இப்பழக்கவழக்கத்தினை கடைப்பிடித்து வருகின்றனர். இவர்கள் தற்போது பாவாடை-தாவணி அணியக் கூடியவர்களாக காணப்படுகின்றனர். பெண்கள் தங்களை அலங்கரித்துக் கொள்வர். கழுத்தில் காசுமாலை, நிக்கல் காப்பு, மூக்கில் மோதிரம் போன்றவற்றினை அணிந்து கொள்வர். விவாகமான பெண்கள் தாலியாக பாசிமணி, சிறுமணிகளை அணிந்து கொள்வர்.

வனக்குறவர்களின் குடியிருப்பானது தாளிப்பனை ஓலையினால் வேயப்பட்ட குடிசைகளாக காணப்படுகின்றது. இக்குடிசைகள் ஆங்காங்கே காணப்படுகின்றன. அவர்களின் குடிசை 10 அடி நீளமும் 03 அடி அகலமும் கொண்டமைந்ததுடன் வடக்கு - தெற்கு பார்வையுடையதாக இது காணப்படுகின்றது. இக்குடிசைக்குள் குடும்ப அங்கத்தவர்கள் மட்டுமல்லாது வாழ்வாதாரத்துக்குத் தேவையான பித்தளைப் பாத்திரங்கள், ஈட்டிகள், ஏனைய ஆயுதங்கள், தானியங்கள், உலர்த்திய இறைச்சிகள், துணிமணிகள், பாம்புப் பெட்டிகள், கோழிகள், முட்டை இடுவதற்கான பெட்டிகள், நாய் படுத்திருப்பதற்கான வசதிகள் காணப்படுகின்றன. தற்போது ஒரு சில வீடுகள் இக்குடிசை நிலையிலிருந்து கல்வீடுகளாக மாறியுள்ளன.

இப்பிரதேசங்களில் ஆண்கள் வாழ்வாதாரத்தினைப் பெற்றுக் கொள்வதற்காகச் செல்லும் வேளை பெண்கள் வீட்டு வேலைகளில் மூழ்கியிருப்பர். அவர்கள் அரிசி புடைத்தல், மாவு அரைத்தல், சமைத்தல், தண்ணீர் எடுத்தல், பாய்கள் பின்னுதல், சட்டி, பானைகளைக் கழுவுதல் போன்ற பல வேலைகளில் நாளாந்தம் ஈடுபடுகின்றனர்.

இவர்கள் நாவற்பழம், உடும்பு இறைச்சி, தேன், கிழங்கு வகைகள், குரக்கன், தானிய வகைகள் ஆகியவற்றை விரும்பி உண்பதுடன் வேட்டையாடுதல், தேனெடுத்தல், காட்டுக்கிழங்கு எடுத்தல் போன்றவற்றின் மூலம் உணவுப் பொருட்களை சேகரிப்பர். இவர்கள் புலித்தோல், மான்தோலில் படுத்துறங்கக் கூடியவர்களாகவும், தேனில் இறைச்சியினை அவித்து உண்ணக் கூடியவர்களாகவும் வெற்றிலை, மதுப்பழக்க வழக்கத்திற்கு அடிமையாக உள்ளவர்களாகவும் காணப்படுகின்றனர். (Riswan, Rameez, Lumna, 2017)

**இலக்கிய மீளாய்வு**

மப்றூக் (2011) என்பவரால் எழுதப்பட்ட, ''அளிகம்பை வனக்குறவர் - கவனிக்கப்படாத சமூகம்'' எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் அளிகம்பைக் கிராம வரலாறு, மக்களின் பழக்கவழக்கங்கள், மொழி தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

நிஷாந்தி உதயகுமாரன் (06 ஜுன் 2013) என்பவரால், ''அளிகம்பைக் கிராமத்தின் சமூகக் கட்டமைப்பு - சமூகவியல் ஆய்வு'' எனும் தலைப்பில் எழுதப்பட்ட ஆய்வுக் கட்டுரையில் அளிகம்பைக் கிராம மக்களின் வரலாறு, கிராமத்தின் தோற்றப் பொழிவும் கிராம மக்களும், மதம், சாதி, மொழிக்கட்டமைப்பு, தொழிலும் பொருளாதாரமும், கல்வி நிலை, உறவுமுறை, சடங்குகள், பழக்கவழக்கங்கள், மாற்றங்கள், சமூகக்கட்டமைப்பு சார் குறைபாடுகள் தொடர்பில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

குகபாலன், கா., (2000) என்பவரால் எழுதப்பட்ட, ''இலங்கைப் பழங்குடிகள்'' தலைப்பிலான வனக்குறவர்களின் வாழ்வியல் ஆய்வுக் கட்டுரையில் வனக்குறவர்களின் வாழ்வியல், பரம்பல், மொழி தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

றிஸ்வான், எம்., றமீஸ், ஏ., லும்னா, என்., (2017) என்பவர்களால் எழுதப்பட்ட, ''Social Economic and Cultural Challenges Confronting Gypsies in Aligambai Village Sri Lanka'' என்ற ஆய்வுக் கட்டுரையில் அளிகம்பை குறவர்கள் தமது தனித்துவ அடையாளத்தை நிலைநாட்டுவதில் எதிர்கொள்ளும் சமூகப் பொருளாதார மற்றும் கலாச்சார சவால்களை வெளிக்கொண்டு வருவதே பிரதானமான நோக்கமாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வின் முடிவுகளாக குடியிருப்பு இன்மை, நீர்ப் பற்றாக்குறை, மலசலகூட வசதியின்மை, கல்வி

தொடர்பான சவால்கள், வைத்தியசாலை வசதியின்மை, போக்குவரத்து சிரமம், மிருகங்களின் அச்சுறுத்தல், போதைப்பொருள் பாவனை, வறுமை, சமூக அந்தஸ்தினைப் பெறுவதில் சிக்கல்நிலை, மொழிரீதியான பிரச்சினைகள் போன்றன அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

மப்றூக் (13 மே 2014) என்பவரால் எழுதப்பட்ட, ''அளிகம்பை குறவர் சமூகத்தின் கதை'' எனும் ஆய்வுக் கட்டுரையில் கடந்த நான்கு வருடங்களில் அளிகம்பைப் பிரதேசத்தில் ஆங்காங்கே சிறிய மாற்றங்கள் இடம்பெற்றாலும் அம்மக்களின் வாழ்க்கை எப்போதும் போல் வரண்டே கிடக்கின்றது எனக் குறிப்பிடப்பட்டுள்ளதுடன், அவர்களின் வாழ்க்கையிலும், சமூகக் கட்டமைப்பிலும் சொல்லிக் கொள்ளும் வகையில் எவ்வித முன்னேற்றங்களையும் காணமுடியவில்லை. ஒரு வேலை சோற்றுக்கும் ஒரு குடம் நீருக்கும் அலைவதற்கே அவர்களுடைய ஒவ்வொரு நாளும் போதுமாக இருக்கின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

அமீன், ஸீ.எம்.ஏ. (1990) என்பவரால் எழுதப்பட்ட, ''சமூகப்புனரமைப்பில் மஸ்ஜிதுக்களின் பங்கு'' எனும் நூலின் முதற்பகுதியில் இஸ்லாத்தின் ஆரம்பகாலப் பிரிவில் மஸ்ஜித் வகித்து வந்த உன்னத நிலை பற்றிய வரலாறு எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. மேலும் மஸ்ஜிதுக்களின் பணிகளை விரிவுபடுத்துதன் மூலம் எவ்வாறு சமூகத்தினைப் புனரமைக்கலாம் என்று கூறப்பட்டள்ளது. நவீன காலச் சூழலில் மஸ்ஜித்துக்களின் செல்வாக்கையும் அளவிட முடியா ஆற்றலையும் நடுநிலை நின்று நேர்மையானதுமான எதிர்நிலையானதுமான பயன்பாட்டுத் தன்மைகளின் வெளிச்சத்தில் நிருபித்துக்காட்டி இருக்கின்றார். இறுதியாக மஸ்ஜிதின் செயற்பாட்டிற்கு உயிர்நாடியாகவுள்ள நிருவாகத்தர் எத்தகையவர்களாக இருக்க வேண்டும் என்பதினை சுருக்கமாக தெளிவுபடுத்துகின்றார்.

Nairoos, MHM., Ismiya Begam, MS., and Safnas, I., (2017) என்பவர்களால் எழுதப்பட்ட, ''சமூகப்புனரமைப்பில் மஸ்ஜித் ஆற்ற வேண்டிய பங்களிப்பு - கெக்கிராவை பிரதேச ஜும்ஆ மஸ்ஜித்துக்களை மையப்படுத்திய ஆய்வு'' எனும் ஆய்வானது ஆய்வுக்குட்படுத்தப்பட்ட மஸ்ஜித்துக்கள் சமூகத்தின் சகல துறைகளையும் மையப்படுத்தி புனரமைப்புப் பணிகளை போதியளவு முன்னெடுக்கின்றதா? என்பதினை மக்களின் திருப்தி நிலையூடாக கண்டறிவதை முதன்மை நோக்கமாகவும் அதன் பணிகள் போதியதாக இல்லாவிட்டால் அதற்கான காரணங்களை கண்டறிவதனையும் மக்களின் அன்றாட வாழ்வியல்சார் நடைமுறைகளை மஸ்ஜித்துக்கள் ஊடாக விரிவுபடுத்துவதற்கான ஆலோசனைகளை முன்வைப்பதையும் துணைநோக்கங்களாகக் கொண்டுள்ளது. இவ்வாய்வின் மூலம் அப்பிரதேசத்தில் உள்ள பெரும்பான்மையான மஸ்ஜித்துக்களின் பணி போதியதாக இல்லை என்பது கண்டறியப்பட்டுள்ளது. மேலும் காலமாற்றத்திற்கேற்ப சமூக நலப்பணிகளை முன்னெடுத்துச் செல்லும் பிற மஸ்ஜித்களுடன் இணைந்து இவை வேகமாக பயணிப்பதன் மூலம் முஸ்லிம் சமூகத்தினது வெற்றிக்கும் சமூக நல சீராக்கத்திற்கும் பங்காற்றக் கூடிய பொருத்தமான ஓர் சமூக நிறுவனங்களாக மஸ்ஜிதுகள் செயற்பட முடியும் என்பதை இவ்வாய்வு முடிவாக உரைக்கின்றது.

மேலுள்ள தலைப்புக்களில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தாலும் எமது தலைப்புக்குப் பொருந்தும் வகையில் அளிகம்பை பிரதேசத்தை மையப்படுத்திய ஆய்வு இதுவரை மேற்கொள்ளப்படவில்லை. அந்த இடைவெளியை இந்த ஆய்வு நிரப்புகின்றது என்ற வகையில் இவ்வாய்வு முக்கியத்துவம் பெறுகின்றது.


**தகவல் பகுப்பாய்வும் கலந்துரையாடலும்**

ஆய்வுப் பிரதேசத்தில் இருந்து பெறப்பட்ட தரவுகளில் இருந்து இம்மக்கள் ஏனைய குழுக்களில் இருந்து வேறுபட்ட ஒரு குழுவாகவும் பிரதான சமூகத்திலிருந்து புறம் ஒதுக்கப்பட்ட ஒரு சமூகமாகவும் காணப்படுவதனால் பலதரப்பட்ட பொருளாதார, கல்வி, சமூக மற்றும் கலாசார ரீதியான சவால்களை எதிர்கொள்வதோடு அன்றாட வாழ்விலும் பல பிரச்சினைகளுக்கு முகங்கொடுத்து வாழ்ந்து வருகின்றனர் என்பதும் அவற்றை நிவர்த்தி செய்யும் முகமாக தேவாலயம் பல உதவிகளை மேற்கொண்டு வருவதும் தெரிய வந்தது.

1. **பொருளாதார பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தேவாலயத்தின் பங்களிப்பு**

அளிகம்பை மக்களின் 50 குடும்பங்களிடமிருந்து பெறபபட்ட தரவுகளுக்கமைய அவர்கள் முன்னர் பாம்பாட்டுதல், வேட்டை ஆடுதல் போன்றவற்றில் ஈடுபடுவதனூடாக தமது பொருளாதாரத் தேவைகளை நிவர்த்தி செய்து கொண்டபோதிலும் காலப்போக்கில் இவற்றில் ஈடுபட முடியாத நிலையில் கூலித் தொழில், விவசாயம், அரச தொழில், வீட்டுக் கடை, வீட்டுத்தோட்டம், மீன்பிடி, மாடு, ஆடு மற்றும் கோழி வளர்ப்பு, தையல் போன்ற பல்வேறு தொழில்களை மேற்கொள்வதாக அறியக்கிடைத்தது.

இவர்களில் அதிகமானோர் (30 பேர்) கூலித் தொழிலில் ஆர்வம் காட்டுகின்றனர். வேளாண்மை, வயலில் கிருமிநாசினி தெளித்தல், புல் புடுங்குதல் போன்ற தொழில்களில் 40 பேர் ஈடுபடுகின்றனர். 20 பேர் விவசாயத்திலும், 05 பேர் வீட்டுக்கடையிலும், 10 பேர் வீட்டுத்தோட்டத்திலும், 05 பேர் மாடு வளர்ப்பிலும், 7 பேர் ஆடு வளர்ப்பிலும், 10 பேர் கோழி வளர்ப்பிலும், 3 பேர் தையலிலும், வேறு சிலர் மீன்பிடி, அரச உத்தியோகம் போன்றவற்றிலும் ஈடுபடுகின்றமையும் தெரிய வந்தது. இதனை வரைபடம் 01 தெளிவுபடுத்துகிறது.




வரைபடம்: 01

அந்தவகையில் தேவாலயமானது பொருளாதார ரீதியாக அவர்களுக்கு பின்வரும் உதவிகளை செய்து வருகின்றமையை அறிய முடிந்தது.

i. தங்குவதற்கான போதிய வசதியற்றுக் கஷ்டப்படும் குடும்பங்களையும், யாசகம் கேட்டு நாடோடிகளாகத் திரிவோரையும் இனங்கண்டு, அவர்களுக்கான வீட்டுக் கட்டுமானத்துக்கான உதவிகளை மேற்கொள்ளல்.
ii. விவசாய நிலங்கள் மற்றும் கோழிகளை வழங்குதல் போன்றவற்றினூடாக தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.
iii. போக்குவரத்துக்கான செலவுகளை வழங்குதல்.

iv. வைத்தியசாலைக்குச் செல்லல் போன்ற அவசர தேவைகளின் நிமித்தம் போக்குவரத்துக்காக தேவாலயத்தின் வாகனங்களை வழங்குதல்.

இவ்வாறான பொருளாதார ரீதியான உதவிகளினூடாக அவர்கள் பொருளாதார ரீதியாக ஓரளவு மேம்பட்டுக் காணப்பட்டமையை அவதானிக்க முடிந்தது. எனினும் குறித்த சமூகத்தனரின் வீட்டு வசதிகள் மற்றும் சூழல் என்பவற்றை அவதானிக்கையில் அங்கு பல்வேறு அபிவிருத்திகள் மேற்கொள்ள வேண்டிய நிலை காணப்பட்டமையும் இங்கு குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இருப்பினும் அவர்களின் கடந்த கால பொருளாதார நிலையுடன் ஒப்பிடுகையில் தேவாலயத்தின் உதவிக்குப் பின்னரான தற்போதான நிலை முன்னேற்றகரமாகவே காணப்படுகின்றமையை அவர்களுடனான கலந்துரையாடலின்போது அறிய முடிந்தது. இதனூடாக அவர்களின் பொருளாதார நிலையை தரமுயர்த்துவதில் குறித்த தேவாலயம் பல்வேறு பங்களிப்புக்களை ஆற்றிவருகின்றமை தெளிவாகிறது.

**2. கல்வி ரீதியான பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தேவாலயத்தின் பங்களிப்பு**

அளிக்கம்பை கிராம மக்களின் கல்வி நிலை முன்னைய காலத்தை விட மேம்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகிறது. குறித்த தேவாலயத்தின் ஈடுபாடே இதற்கான பிரதான காரணமாகும்.

இக்கிராமத்தை சேர்ந்த மாணவர்களில் பெரும்பாலானவர்கள் தமது கற்றல் செயற்பாட்டினை அங்குள்ள பாடசாலையிலேயே மேற்கொள்கின்றனர். எனினும் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் கல்விப் பொதுத் தராதர உயர்தரம் கற்கும் இக்கிராமத்து மாணவர்கள் தமது கல்வியை அக்கரைப்பற்று, பண்டாரவளை, மட்டக்களப்பு, இந்தியா போன்ற இடங்களில் தங்கியிருந்து மேற்கொள்வதற்கான வசதிகளை தேவாலயமே மேற்கொள்வதாக கிராம மக்கள் தெரிவித்தனர்.

அளிகம்பை கிராம மக்களின் கல்விநிலை உயர்வுக்கு இக்கிராமத்தினை சேர்ந்த தேவாலய பாதிரியார்களின் பங்களிப்பு பிரதானமானதாகும். அதாவது இக்கிராமத்தினை சேர்ந்த மாணவர்களுக்கு அவர்கள் ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்களை கற்றுத் தருவதாகவும் இதன் மூலம் தமது கல்வி அறிவை வளர்த்துக் கொள்ள முடிவதாகவும் இங்குள்ள மாணவர்கள் தெரிவித்தனர்.

அத்தோடு பல்வேறு பொருளாதாரப் பிரச்சினைகளை இம்மக்கள் எதிர்கொண்ட போதிலும் ஒவ்வொரு குடும்பமும் தமது பிள்ளைகளின் கல்விக்கு மாதாந்தம் ரூபா 200 தொடக்கம் 1000 வரை செலவிடுகின்றனர். இச்செயற்பாடு குறித்த தேவாலயம் கல்விக்காக வழங்குகின்ற ஊக்குவிப்பின் விளைவாகும் என்பதை இக்கிராமத்து மக்களுடனான கலந்துரையாடலினூடாக அறிய முடிந்தது.

மேற்கூறப்பட்டவை தவிர்ந்து கல்வி ரீதியாக குறித்த தேவாலயத்தின் மூலம் ஆற்றப்படும் பிரதான பணிகளாக பின்வற்றைக் குறிப்பிட முடியும்.

i. கல்வி ரீதியான செலவுகளுக்கு உதவிகளை மேற்கொள்ளல்.

ii. வெளியிலிருந்து ஆசிரியர்களை வரவழைத்து மாணவர்களுக்கு கல்வியை வழங்குதல்.
iii. கல்வி கற்கும் மாணவர்களுக்கு தேவையான புத்தகங்களை வருட இறுதியில் பெற்றுக்கொடுத்தல்.
iv. விடுமுறை நாட்களிலும், மாலை நேரங்களிலும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்களை நடாத்துதல்.
v. மாணவர்களுக்கு கல்வியில் நாட்டம் கொள்ளும் வண்ணம் ஊக்குவிப்பு நிகழ்ச்சிகளை நடாத்துதல்.
vi. வெளியில் இருந்து வரக்கூடிய கல்விக்குரிய உதவிப் பொருட்களை சமமாகப் பிரித்து வழங்குதல். (ஒரு மாணவனுக்கு 5 கொப்பிகள், 5 பேனா, பென்சில்கள், காலணிகள்)

குறித்த தேவாலயத்தின் இவ்வாறான செயற்பாடுகளின் மூலமாக ஆய்வுப் பிரதேச மாணவர்களின் கல்வியில் குறிப்பிடத்தக்களவு முன்னேற்றங்கள் ஏற்பட்டிருப்பதையும் அவர்களுக்கு மத்தியில் கல்வியின் அவசியம் பற்றிய விழிப்புணர்வு மற்றும் கற்றுக்கொள்ளவதில் உள்ள ஆர்வம் அதிகரிப்பு போன்ற சாதகமான பல மாற்றங்கள் ஏற்பட்டிருப்பதும் அவர்களுடனான கலந்துரையாடலின் போது தெரிய வந்தது.

அத்தோடு குறித்த மக்களின் கல்வி ரீதியான அடைவுகள் தொடர்பில் ஆராய்ந்தபோது இங்கு ஒருவர் புனித சவேரியார் வித்தியாலயத்தில் தொண்டாசிரியராகவும் மற்றும் இருவர் பாலர் பாடசாலை ஆசிரியர்களாகவும், வேறு ஒருவர் அரசு போக்குவரத்து சாரதியாகவும் பணி புரிகின்றமை தெரிய வந்தது. இதனூடாக குறித்த பிரதேச மாணவர்களின் கல்வி நிலையை மேம்படுத்தும் நோக்கில் பல பணிகள் தேவாலயத்தின் மூலம் மேற்கொள்ளப்பட்ட போதும் அச்சமூக அங்கத்தவர்கள் ஆசிரியர் தொழில் உட்பட அரச உத்தியோகங்களில் ஈடுபடுவது மிகவும் குறைவாகவே காணப்பட்டமையினை அவதானிக்க முடிந்தது.

எனவே, குறித்த தேவாலயமானது ஆய்வுப் பிரதேச மக்களின் கல்வி ரீதியான மேம்பாடுகளுக்காக பல்வேறு பங்களிப்புக்களை மேற்கொண்ட போதும் அவர்களின் கல்விச் செயற்பாடுகள் மற்றும் அதன் அடைவுகளில் இன்னும் பல முன்னேற்றங்களும் மேம்பாடுகளும் ஏற்பட வேண்டிய நிலை அங்கு காணப்படுவது தெளிவாகிறது.

### 3. சமூக, கலாசார ரீதியான தேவாலயத்தின் பங்களிப்புக்கள்

இக்கிராமத்தின் சமூகக் கட்டமைப்பில் ஆரம்பகாலத்தை விட இன்று பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையினை இங்கு பெறப்பட்ட தரவுகள், தகவல்களை அடிப்படையாகக் கொண்டு அறிய முடிகிறது.

#### 3.1. தேவாலயத்தின் கலாசார ரீதியான பங்களிப்புக்கள்

தேவாலயத்தினால் மேற்கொள்ளப்படும் கலாசார ரீதியான பங்களிப்புக்களாக பின்வரும் அம்சங்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. ஞாயிற்றுப் பூஜையினை தொடர்ச்சியாக நடாத்தி வருதல்,
ii. அவர்களுக்கிடையில் திருமணங்களை நடத்தி வைத்தல்.
iii. புதுத் தம்பதிகளின் குடும்ப வாழ்வின் முன்னேற்றத்துக்கான வழிவகைகளை மேற்கொள்ளல்.

இதனூடாக குறித்த சமூக மக்களின் சமயத்துடனான ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையிலும் அவர்களின் திருமண வாழ்க்கையை ஸ்திரப்படுத்தும் நோக்கிலும் குறித்த தேவாலயத்தினூடாக பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்படுகின்றமை தெளிவாகிறது.

தேவாலயத்தின் இவ்வாறான செயற்பாடுகளின் மூலம் அவர்களது கலாசார ரீதியான அடையாளங்களைப் பாதுகாக்கும் உணர்வு மற்றும் அவற்றுடனான ஈடுபாடு என்பவை அதிகரித்திருக்கின்றமையும் திருமணத்தின் போது கிடைக்கப்பெறும் உதவிகளின் ஊடாக அவர்களது வாழ்வாதார நிலை மேம்பட்டிருக்கின்றமையும் அவர்களுடனான கலந்துரையாடலினூடாக அறியக்கிடைத்தது.

### 3.2. தேவாலயத்தின் சமூக ரீதியான பங்களிப்புக்கள்

தேவாலயத்தின் வழிகாட்டல்களுக்கும் போதனைகளுக்கும் கட்டுப்பட்டு நடக்கின்றமையினால் இப்பிரதேச மக்களிடையே ஒற்றுமையும் பிணைப்பும் வலுவாகக் காணப்படுகிறது. அத்தோடு இம்மக்களிடையே ஏதேனும் தகராறுகள் ஏற்படும் பட்சத்தில் தேவாலயமே முன்னின்று அவற்றைத் தீர்த்து வைக்கும் நிலையே அங்கு காணப்படுகிறது. அதேபோல் இச்சமூகத்தில் குடும்பங்களிடையே இடம்பெறும் பிணக்குகள், பிரச்சினைகளின் போதும் அவற்றைத் தீர்த்து வைக்கும் பணியை குறித்த தேவாலயமே மேற்கொள்கின்றது. இங்கு ஏற்படும் குடும்பப் பிணக்குகளுக்கான முதன்மைக் காரணியாக மதுப்பாவனை காணப்படுகின்றமையும் அவர்களுடனான நேர்காணலின் போது அறிய முடிந்தது.

அண்மைக் காலத்தில் அளிகம்பை பிரதேசத்தில் தேவாலயத்தின் மூலம் பின்வரும் அபிவிருத்திகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையை அறிய முடிந்நது.

i. மின்சார வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
ii. கழிவறை வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
iii. வீடற்றுக் காணப்படுபவர்களுக்கு வீட்டுத் திட்ட வசதிகளை மேற்கொள்ளல்
iv. விவசாயத்துக்கும் மக்களுக்கும் இடையூறு விளைவிக்கும் வனவிலங்குகளிலிருந்து பாதுகாக்கும் வண்ணம் முகாம் (camp) அமைத்துக் கொடுத்தலுடன் மின்சார வேலிகளும் அமைத்தல்
v. நீர் வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல் (சுத்தமான குடிநீர், குழாய் நீர் வசதி, கிணறுகள்)
vi. சமுர்த்தி வேலைத்திட்டங்களை மேற்கொள்ளுதல்

இவ்வாறான உதவிகளின் ஊடாக அச்சமூகத்தின் பல்வேறு குடும்பங்கள் பயனடைந்திருக்கின்மையும் அவர்களது முன்னைய நிலையுடன் ஒப்பிடுகையில் சமூக ரீதியான பல மேம்பாடுகள் ஏற்பட்டிருக்கின்றமையும் அவர்களுடனான கலந்துரையாடலின் ஊடாகவும் அவதானத்தினுடாகவும் அறியக் கிடைத்தது.

எனினும் குறித்த பிரதேச மக்களின் சமூக சூழல் மற்றும் அவர்களின் வீட்டு வசதிகளை அவதானித்த போது அங்கு மேலும் பல முன்னேற்ற வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்படுவதற்கான தேவை நிலவுகின்றமை தெளிவாகியது.

அத்தோடு குறித்த பிரதேச மக்களின் வாழ்வாதார நிலையை மேம்படுத்தும் முகமாக தேவாலயமானது பின்வரும் செயற்திட்டங்களை மேற்கொள்கின்றது.

i. பிரதேச மக்களுக்கு உலக உணவுத்திட்டத்தின் கீழ் (Relief and Recovery Assistance to Displaced Persons - World Food Programme) பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டு உலர் உணவுப் பொருட்கள் இலவசமாக வழங்குதல்.

அதன்படி ஒரு குடும்பத்துக்கு சராசரியாக அரிசி - 1 கிலோ 450 கிராம், பருப்பு – 750 கிராம், சீனி - 300 கிராம், தேங்காய் எண்ணெய் - 375 மில்லி லீற்றர், உப்பு - 75 கிராம் வழங்கப்படுகிறது.

ii. 05 வயதிற்குக் குறைந்த குழந்தைகள் காணப்படுபவர்களானால் மாதம் ஒன்றுக்கு 300 கிராம் சீனியும், 1.5 கிலோகிராம் திரிபோச சத்துணவும், 300 மில்லி லீற்றர் தேங்காய் எண்ணெய்யும் மேலதிகமாக வழங்கப்படுகின்றன.
iii. இப்பிரதேச குடியிருப்புக்கான கூடாரம், பாய் மற்றும் தளபாடங்கள் என்பனவற்றை Ahed, UNICEF போன்ற அரச சார்பற்ற நிறுவனங்களினூடாக பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

குறித்த தேவாலயத்தின் இவ்வாறான வேலைத்திட்டங்கள் ஊடாக அச்சமூக மக்கள் வாழ்வாதார ரீதியாக பல்வேறு பயன்களை அடைந்த போதிலும் குறித்த மக்களின் பொருளாதார நிலை மற்றும் அவர்களின் வருமானம் என்பவற்றைக் கவனத்தில் கொள்ளும் போது அவர்களின் வாழ்வாதார ரீதியான தேவைகள் மேலும் மேம்படுத்தப்பட வேண்டிய நிலை இங்கு காணப்படுகின்றமையும் அவர்களுடனான உரையாடலினூடாக அறியக்கிடைத்தது.

**முடிவுரை**

ஒரு சமூகத்தின் பல்வேறு துறைசார் முன்னேற்றத்தில் அச்சமூகத்தின் மதஸ்தலங்களின் பங்களிப்புக்கள் மிக முக்கியமானவையாகும். அந்தவகையில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்ட பழங்குடிகளான அளிகம்பை கிராம வாசிகள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பொருளாதார, கல்வி, கலாசார மற்றும் சமூக ரீதியான சவால்களை இனங்கண்டு மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வதிலும் அவற்றை நிவர்த்தி செய்வதிலும் குறித்த பிரதேச தேவாலயம் பாரிய பங்களிப்புக்களை ஆற்றி வருகிறது. முன்னைய காலத்துடன் ஒப்பிடுகையில் தேவாலயத்தின் இவ்வாறான சேவைகளின் ஊடாக குறித்த மக்களின் பொருளாதார, கல்வி, கலாசார, சமூக ரீதியான பல்வேறு சாதகமான மாற்றங்களும் குறிப்பிடத்தக்களவு மேம்பாடுகளும் ஏற்பட்டுள்ளன. எனினும் குறித்த பிரதேச மக்களின் வாழ்வாதார, பொருளாதார, சமூக மற்றும் கல்வி நிலைகளில் இன்னும் பல முன்னேற்றங்களும் மாற்றங்களும் ஏற்பட வேண்டிய தேவை அங்கு நிலவுகின்றமையை இவ்வாய்வினூடாக அறிய முடிகிறது.

மேலும் இச்சமூகம் பற்றியும் அவர்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி நிலைகள் குறித்தும் தனியான ஆய்வுகள் எதிர்காலத்தில் மேற்கொள்வதானது இச்சமூகத்தின் நிலை மற்றும் அவர்களின் தேவைகள் தொடர்பில் கண்டறிவதற்கும் அவற்றுக்கான பொருத்தமான தீர்வுகளையும் ஆலோசனைகளையும் முன்வைப்பதற்கும் உறுதுணையாக அமையவல்லதாகும்.

**உசாத்துணைகள்**

அமீன், ஸீ.எம்.ஏ. (1990). *சமூகப்புனரமைப்பில் மஸ்ஜிதுகளின் பங்கு.* திஹாரிய: ரேஷ்மா பதிப்பகம்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலக புள்ளிவிபரத் திரட்டு - 2013.

ஒஸ்மான், அ (2016). பள்ளிவாயல்களை மீண்டும் சமூகத்தின் மையமாக மாற்ற வேண்டிய தேவை இருக்கிறது. *மீள்பார்வை.* பெப்ரவரி, ப.363. கொழும்பு: மீள்பார்வை ஊடகமையம்.

குகபாலன், கா.,(2000).*இலங்கையில் பழங்குடிகள் வனக்குறவர் வாழ்வியல் ஆய்வு.* கொழும்பு: பரணன் அசோசியேட்ஸ் பிறைவேட் லிமிடட்.

திருமுகன். (2011.மே.28). ஈழத்தில் சைவ ஆலயங்களும், அறப்போதனைகளும். *இந்து ஒளி.* தீபம்-15. சுடர்-03. பக்.26. கொழும்பு: அகில இலங்கை இந்து மன்றம்.

Riswan,M., Rameez, A., Lumna, N. (2017).Social,Economic and Cultural Challenges Confronting Gypsies in Aligambai Village, Sri Lanka. *E-Proceeding (Vol.I), South*

*Eastern University Arts Research Session 2017*. Retrieved on 14 September 2020 from http://ir.lib.seu.ac.lk/handle/123456789/3143

நிஷாந்தி. (2013). *அளிகம்பைக் கிராமத்தின் சமூகக் கட்டமைப்பு - சமூகவியல் ஆய்வு.* Retrieved on 14 September 2020 from http://www.keetru.com

நைரூஸ், எம். எச். எம்., பேகம், எம். எஸ்., ஸப்னாஸ், ஐ. (2017). சமூகப்புனரமைப்பில் மஸ்ஜித் ஆற்ற வேண்டிய பங்களிப்பு - கெக்கிராவை பிரதேச ஜும்ஆ மஸ்ஜிதுக்களை மையப்படுத்திய ஆய்வு. *4th International Symposium* of FIA-2017. Retrieved on 12 September 2020 from http://ir.lib.seu.ac.lk/handle/123456789/2798

மப்றூக். (2011). *அளிகம்பை வனக்குறவர்: கவனிக்கப்படாத சமூகம்.* Retrieved on 14 September 2020 from http://www.tamilmirror.lk

மப்றூக். (2014). *அளிகம்பை குறவர் சமூகத்தின் கதை.* Retrieved on 25 September 2020 from http://yarl.com

ஹபீபுல்லாஹ். (2019). இன நல்லுறவு, சமாதானம் என்பவற்றை கட்டியெழுப்புவதில் முஸ்லிம் சமய நிறுவனங்களின் பங்களிப்பு (கிண்ணியா ஜம்மியத்துல் உலமாவின் இன நல்லுறவு சமாதானச் செயற்பாடுகளை மையப்படுத்திய ஓர் ஆய்வு). *Sri Lankan Journal of Arabic and Islamic Studies*, *2*(1): 43-56. Retrieved on 19 September 2020 from http://seu.ac.lk/sljais .